DEPOSITION OF WITNESS

(Chapter XVII BNSS)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, THIRUCHULI

Calender Miscellaneous **STC.No. 188/2023**

Preliminary Register

Sessions

Deposition of witness for Prosecution

Defence

Name : ராமச்சந்திரன் (P.w.3)

Father/Husband Name :

Village :

Taluk :

Caste :

Calling :

Religion :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 19th day of January 2026

(எதிரி ஆஜர் ).

**முதல் விசாரணை :–**

நான் தற்போது நெடுங்குளத்தில் குடியிருந்து வருகிறேன். நான் லோடு மேன் வேலை செய்து வருகிறேன். அசா1ஐ எனக்கு தெரியாது. ஆஜர் எதிரியை எனக்கு தெரியாது. வழக்கு பற்றி எனக்கு எதுவும் தெரியாது. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**(அரசு தரப்பில் சாட்சியை பிறழ்சாட்சியாக விசாரிக்க அனுமதி கோரி அனுமதி வழங்கப்பட்டது.)**

**அ.த.கு.வி :–**

கடந்த 16.04.2023ம் தேதி மாலை 5மணியளவில் நான் வேலை செய்யும் கல்குவாரியில் ஆஜர் எதிரியானவர் அங்கு வந்து அசிங்கமாக பேசி எனக்கு வரவேண்டிய மாமூல் வரவில்லை என்றால் உன்னையும் உனது ஓனரையும் கொன்றுவிடுவோம் என்று உமா மகேஸ்வரனை பார்த்து மிரட்டினார் என்றும் அப்போது வேலை செய்து கொண்டிருந்த நான் அகத்தீஸ்வரனும் சத்தம் போட்டு அனுப்பி வைத்தோம் என்றும் அதன்பிறகு 23.04.2023ம் தேதி மாலை 4மணியளவில் எதிரியானவர் மீண்டும் கல்குவாரிக்கு வந்து உமாமகேஸ்வரனை பார்த்து என்னடா குவாரி நடத்துறீங்க நீங்க குவாரி நடத்தனும்டா நீங்க மாமூல் கொடுக்க வேண்டும் என்ற பயம் உங்களுக்கு இல்லையாடா என்று கூறி உன்னையும் உனது ஓனரையும் வெட்டி கொன்றுவிடுவோம் என்று மிரட்டினார் என்றும் எதுவேண்டுமானாலும் எனது ஓனரிடம் பேசி கொள் என்று உமாமகேஸ்வரன் பயமுறுத்தி சென்றபோது உமாமகேஸ்வரனை வழிமறித்து உனது ஓனரை நான் சொன்னதை சொல்லாவிட்டால் சொன்னதை செய்துவிடுவேன் என்று மிரட்டிச் சென்றார் என்றும் போலிசார் விசாரணையில் சொல்லிவிட்டு தற்போது உண்மையை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எ.த.கு.வி –**

**இல்லை.**

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

மாவட்ட உரிமையியல் மற்றும்,
நீதித்துறை நடுவர்,
திருச்சுழி.